செய்தி குறிப்பு எண்–76 நாள்–14.8.2008

# மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் விடுக்கும் சுதந்திரத் திருநாள் வாழ்த்துச் செய்தி (14.8.2008)

----

நமது நாட்டின் சுதந்திரத் தினவிழா மிகுந்த எழுச்சியோடும், மகிழ்ச்சியோடும் கொண்டாடப்படுகிறது.

ஏறத்தாழ 200 ஆண்டுகாலம் இந்தியத் திருநாட்டை அடிமைப்படுத்தி ஆண்ட அந்நிய ஆதிக்கத்தைத் தகர்த்து நமது நாடு விடுதலை பெற்ற திருநாள் 1947 ஆகஸ்டு 15!

நாம் பெற்ற சுதந்திரத்தால் அடைந்துள்ள பயன்கள் பலப்பல. உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடு என்னும் பெருமையுடன் இந்தியத் திருநாடு திகழ்கிறது.

பெற்ற சுதந்திரம் பேணிப் பாதுகாக்கப்பட நாம் அனைவரும் சாதி, மத, இன பேதங்கள் கடந்து ஒன்றுபட்டுப் பாடுபடவேண்டும் என்பதை நமக்கு உணர்த்திக் கொண்டிருக்கிறது இந்தச் சுதந்திரத் திருநாள்! இந்த உணர்வோடு, தமிழக மக்கள் அனைவர்க்கும் என் இதயம் கனிந்த சுதந்திரத் திருநாள் நல்வாழ்த்துகளைத் தெரிவித்து மகிழ்கிறேன்.

***

வெளியீடு–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.